✒ பேராச்சி கண்ணன்

📷 ஆ.வின்சென்ட் பால்



**ஒன்றோ... இரண்டோ அல்ல. சுமார் ஆயிரத்து 200 கதைகள். வாட்ஸ்அப்பிலும், சமூக ஊடகங்களிலும் ஆடியோவாக பதிவிட்டு சிறந்த கதைசொல்லி எனப் பெயரெடுத்திருக்கிறார் சென்னையைச் சேர்ந்த ரம்யா வாசுதேவன்.**

*கொரோனாவின்போது ‘under the tree’ என்ற பெயரில் இவர் முன்னெடுத்த கதை*




ஆயிரம் கதைகள்
சொன்ன
அபூர்வ
கதை சொல்லி!

சொல்லல் செயல் பாட்டிற்கு இன்றும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் உள்ள னர். தினமும் ஒரு எழுத்தாளரின் சிறு கதையை அவரின் பெயர், அவர் பற்றின அறிமுகம், அந்தக் கதை தாங்கியுள்ள நூலின் பெயர் உள் ளிட்ட குறிப்புகளு டன் சுருக்கமாகச் சொல்ல, அதை உற்சாகமாகக் கேட்டு மகிழ்கின்றனர் வாசகர்கள். குறிப்பாக காலையில் ஹெட் போன் அணிந்தபடி வாக்கிங் செல்பவர்கள்.

“புத்தக வாசிப்பு, ஒருவருக்குள் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும்னு சொல்வாங்க. எனக்குள் எவ்வளவோ மாற்றங்களை நிகழ்த்தியிருக்கு. பரந்துபட்ட அறிவாற்றலையும், அனுபவங்களையும் கொடுத்திருக்கு. அதை மற்றவர்களுக்கும் கொண்டு போகணும்னு தோணுச்சு.

என் கதை சொல்லலின் நோக்கமே வாசிப்பு ஆர்வத்தை தூண்டுவதும், இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளைப் பரவலாகக் கொண்டு சேர்ப்பதும்தான். இப்ப நான் சொல்கிற கதைகளைக் கேட்டு நிறைய பேர் வாசிப்பிற்குள் வந்திருக்காங்க. ரொம்ப சந்தோஷமாக இருக்கு...” என உற்சாகமாகச் சொல்லும் ரம்யாவிடம் கதை சொல்லல் எப்படி ஆரம்பித்தது எனக் கேட்டோம்.

“எனக்கு வாசிப்பு ரொம்பப் பிடிக்கும். சின்ன வயசிலேயே புத்தகங்கள் நிறைய வாசிப்பேன். என் அப்பா வங்கி மேலாளராக இருந்தார். அதனால், ஊர் ஊராக சென்று கொண்டே இருந்தோம். அப்படியாக ஸ்ரீரங்கத்தில் என் படிப்பு நடந்தது. பி.எஸ்சி இயற்பியலும், பிறகு விஷுவல் கம்யூனிகேஷனில் பட்ட மேற்படிப்பும் முடிச்சேன்.

எனக்கு எங்கெல்லாம் படிக்கிற வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் படிப்பேன். சின்ன வயசுல பெரிசா புத்தகங்கள் வாங்க வசதிகள் இருக்கல. கிடைக்கிற புத்தகங்களை வாசிப்பேன். திருமணமாகி சென்னையில் புகுந்த வீட்டிற்கு வந்தேன். இங்கே நிறைய புத்தகங்கள் இருந்ததால வாசிப்பு பழக்கம் தொடர்ந்தது.

ஒருசமயம் என் பள்ளித் தோழிகளைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைச்சது. எல்லோரும் சேர்ந்து வாட்ஸ்அப் குரூப் உருவாக்கினோம். ஆரம்பத்துல சந்தோஷமா போச்சு. பிறகு, எல்லோரும் அவங்கவங்க வேலையைப் பார்க்க போயிட்டாங்க. குரூப்

ரொம்ப அமைதியா இருந்தது.

அப்ப நான்தான், ‘ஏதாவது பேசுங்க... நீங்க படிச்ச புத்தகம் பத்தியோ அல்லது பார்த்த படம் பத்தியாவது சொல்லுங்க’னு சொன்னேன். ‘எங்களுக்கு எதுவும் தெரியாது. நீயே சொல்லு’னு சொன்னாங்க.

‘நான் ஒரு கதை சொல்றேன்’னு சொல்லிட்டு நான் வாசிச்ச புத்தகத்திலிருந்து ஒரு கதையை சொன்னேன். இது 2019 ஆரம்பத்துல நடந்தது. ‘இது நல்லாயிருக்கு. இனி நீயே சொல்லு’னு எல்லாரும் கோரஸா சொன்னாங்க.

நான் எப்பெல்லாம் வாசிக்கிறேனோ, எனக்கு எப்பெல்லாம் தோணுதோ அப்ப சிறுகதைகளைச் சும்மா சொல்லிட்டு இருந்தேன். 20 கதைகள் வரை சொன்னபிறகு சிலர், ‘என் பசங்க எல்லாம் உன் கதையை கேட்குறாங்கப்பா. ரொம்ப நல்லாயிருக்கு. நீ நடுவுல சில ஆன்மிகக் கதைகளும் சொல்லுப்பா. நாங்க சொன்னா கேட்கமாட்டாங்க. நீ சொன்னா குடும்பமா கேட்குறோம்’னு சொன்னாங்க. சரினு குட்டி குட்டியா ஆன்



மிகக் கதைகள் சொன்னேன். இதுல 45 கதைகள் சொல்லியிருந்த நேரம்தான் கொரோனா லாக்டவுன் வந்தது.

அப்ப எனக்கும் பயத்துல ஒரு மாற்றுவழி தேவைப்பட்டது. என் தோழிகளுக்கும் ஒரு மாற்று தேவையா இருந்தது. அப்ப ரொம்ப சின்சியராக தினமும் கதைகள் சொல்ல ஆரம்பிச்சேன். முன்னாடி வெறும் ஆடியோ மட்டும் போடுவேன். கொரோனோ காலத்துல ஒரு போஸ்டர் மாதிரி உருவாக்கி, புத்தகத்தின் அட்டைப்படத்தைப் போட்டு, எழுத்தாளர் பெயரைச் சொல்லி, அவர் பற்றின ஓர் அறிமுகமும் சொல்லிட்டு, அந்தக் கதையைப் படிச்சப்ப நான் என்னவெல்லாம் உணர்ந்தேன் என்கிற விஷயத்தையும் பகிர்ந்திட்டு கதையை சொல்லுவேன்.

புத்தகத்தை அப்படியே வாசிக்க மாட்டேன். படிச்சிட்டு அந்தக் கதையை எளிமையாக சொல்வேன். இப்படி 2020 மார்ச்ல சீரியஸாக ஆரம்பிச்சது, இப்ப வரை தொடருது...” எனச் சிரித்தவர் நிதானமாகத் தொடர்ந்தார்.

“கொரோனா ஆரம்பிச்ச நேரம் இதை, ‘அண்டர் தி ட்ரீ’னு ஒரு பெயர்ல பண்ண ஆரம்பிச்சேன். இதுக்கு பெயர் வச்சதும் என் தோழிகள்தான். முன்னாடியெல்லாம் நான் நேரத்துக்கு கதையைப் போடமாட்டேன். ஒருநாள் காலையில் ரிக்கார்டு பண்ணி போடுவேன். ஒருநாள் மாலையில் ரிக்கார்டு பண்ணி அனுப்புவேன்.

அப்ப என் பள்ளித் தோழி கிருத்திகா, ‘உன் கதையை நிறைய பேர் கேட்குறாங்க. நான் எல்லாருக்கும் அனுப்பிட்டு இருக்கேன். ஆனா, நீ எப்ப கதை போடுறேன்னு தெரியமாட்டேங்குது. நானும் சிலசமயம் வாட்ஸ்அப் பார்க்க மறந்திடுறேன். அந்நேரம் என் தோழிகள் உன் ஃப்ரண்ட் இன்னைக்கு கதை சொல்லலையானு கேட்குறாங்க’னு சொன்னாள்.

அப்பதான் என் தோழிகள் எல்லாம் அவங்கவங்க தோழிகள், குடும்பங்களுக்கு குரூப்ல அனுப்பிட்டு இருந்த விஷயம் எனக்கு தெரிஞ்சது. பிறகு அவளே, மொத்தமாக ஒரு குரூப் உருவாக்கலாம்னு சொன்னாள். ஆனா, எனக்கு பயமா இருந்தது. ‘ஃப்ரண்ட்ஸிற்குள் பிரச்னையில்ல. வெளியில் யாராவது பப்ளிக் திட்டிட்டால் என்ன செய்வது’னு கேட்டேன். ‘அதெல்லாம் வராது’னு சொல்லிட்டு அவளும் மற்ற தோழிகளும் சேர்ந்து ‘அண்டர் தி ட்ரீ’னு பெயரும் ஒரு லோகோவும் வச்சாங்க.

இந்த குரூப் ஆரம்பிச்ச ஒரு மணிநேரத்துல 250 பேர் வந்திட்டாங்க. அப்பெல்லாம் 257 பேர்தான் வாட்ஸ்அப் குரூப்ல இருக்கலாம். இப்ப 300 பேர்னு மாற்றியிருக்காங்க. எனக்கு

தெரிஞ்சவங்க, ‘குரூப் ஃபுல்லா கிடுச்சு மேடம்’னு சொன்னாங்க. நான் அடுத்த குரூப் ஆரம்பிச்சேன். அதுவும் ஃபுல். வாட்ஸ்அப் குரூப் ஆரம்பிச்சு ரெண்டு நாட்கள்ல 500 பேர் இணைஞ்சாங்க. என் கதையை கேட்க இவ்வளவு பேர் இருக்காங்களானு எனக்கே ஆச்சரியமா இருந்துச்சு.

அப்புறமா இன்னும் சின்சியரானேன். முன்னாடியெல்லாம் ரிக்கார்டு பண்ணும்போது குக்கர் சத்தம் எல்லாம் கேட்கும். இப்ப இரவு நேரம் அமைதியாக ஓர் அறையில் வச்சு ரிக்கார்டு செய்து அனுப்புறேன். சிலபேர் உதவிகளும் செய்திருக்காங்க. குறிப்பாக லா.ச.ராவின் மகன் சப்தரிஷி சார் நானூறு ஆடியோக்கள் வரை கரெக்ட் பண்ணிக் கொடுத்திருக்கார். ஏன்னா, இது காலத்துக்கும் நம் பெயரைச் சொல்லும் ஆடியோ. இதை வாசகர்களும் கேட்கலாம், எழுத்தாளர்களும் கேட்கலாம். அதனால, கவனமாக இருக்கேன்.

சிலநேரங்கள்ல எழுத்தாளர்களே கூட என் கதை சொல்லலைக் கேட்டுட்டு ரொம்ப நல்லாயிருக்குனு பாராட்டி மெசேஜ் அனுப்பியிருக்காங்க. சிலர் என் கதையையும் சொல்லுங்கனு கேட்டும் இருக்காங்க. அதேபோல நான் எந்தக் கதையையும் வரிக்குவரி சொல்ல மாட்டேன். அது என் வேலையும் இல்ல. ‘இந்தப் புத்தகம் இந்த விஷயத்தை சொல்லியிருக்கு. மற்றபடி நீங்க படிங்க’னு அவங்களுக்கு வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுவேன்.

ஆங்கிலத்திலுள்ள சில புத்தகங்களை மட்டும் குழந்தைகளுக்காக வரிக்கு வரி சொல்லியிருக்கேன்...” என்கிறவர், தற்போது அட்டவணை போட்டு இயங்கி வருகிறார்.

“இப்ப தமிழ்ச் சிறுகதைகள், ஆன்மிகக் கதைகள், ஆங்கிலப் புத்தகங்கள், குழந்தைகள் கதைகள்னு சொல்கிறேன். ஒவ்வொரு சனிக்கிழமையும் சுய வளர்ச்சி,



முன்னேற்றம் உள்ள ஆங்கிலப் புத்தகங்களைப் படிச்சிட்டு அதன் சாராம்சங்களை தமிழில் சொல்வேன். வெள்ளிக்கிழமைனா ஆன்மிகக் கதைகள் சொல்வேன்.

இதுல 250 கதைகள் வரை வந்தப்ப ஆன்லைன் ஜூம் மீட்டிங் வச்சேன். அப்ப சிலர் குழந்தைகளுக்கென தனி குரூப் ஆரம்பிச்சு அவங்களுக்கான கதைகளை அதில் சொல்லுங்கனு சொன்னாங்க. அப்படியாக அவங்களுக்கு குரூப் ஆரம்பிச்சேன்.

இப்ப எனக்கு 11 வாட்ஸ்அப் குரூப் இருக்கு. ஒவ்வொரு குரூப்லயும் முந்நூறு பேர்கள் இருக்காங்க. இதுதவிர, ஸ்பாட்டிஃபையில இதை அப்லோடு செய்றேன். யார் வேணாலும் கேட்டுக்கலாம். எல்லாமே ஃப்ரீதான்.

இதுல 85 ஆயிரம் பேர் வரை கேட்டிருக்காங்க. இந்த ஸ்பாட்டிஃபையில போய் அனலடிக்ஸ் எடுத்து பார்த்தப்ப என்னுடைய வாசகர்கள் இந்தியா, அமெரிக்கா, துபாய், சிங்கப்பூர்னு நான்கு இடத்துல இருப்பது தெரிஞ்சது. இதெல்லாம் எனக்கு கிடைச்ச ஆசீர்வாதங்கள்...” என நெகிழ்ந்தவர் கதை சொல்லலுக்காக விருதும் வாங்கியிருக்கிறார்.


“கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சிறுவாணி வாசகர் மையம் நடத்தும் நாஞ்சில் நாடன் விருதுல எனக்கு, ‘ஆயிரம் கதைகள் சொன்ன அபூர்வ கதை சொல்லி’னு சிறப்பு விருது வழங்கி கௌரவிச்சாங்க.

இந்நேரம் கோவை ஆர்.எஸ். மங்கலத்துல உள்ள பொது நூலகத்துல இருந்து கற்பகம்னு ஒரு மேடம் எனக்கு போன் செய்தாங்க. அவங்க, ‘நான் நூலகராக இருக்கேன். நிறைய புத்தகங்களை அடுக்கியிருக்கேன். ஆனா, எல்லாத்தையும் படிக்க முடியாது. உங்க கதைகளை கேட்கும்போது, இந்த எழுத்தாளர், இந்த சிறுகதை, அதில் இதைச் சொல்லியிருக்கிறார்னு சொல்லும்போது எழுத்தாளர்கள் பற்றியும் அந்தக் கதைகள் பற்றியும் தெரிஞ்சுக்க முடியுது. இந்த ஆடியோக்களை எங்க நூலகத்திற்குக் கொடுங்க’னு கேட்டாங்க. உடனே கொடுத்தேன்.

அதே நேரம் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகர் இளங்கோ சந்திரகுமார் சாரும் என் முயற்சியைப் பாராட்டினார். அவர் தினமும் என் கதையைக் கேட்பவர். அவர் அசோக்நகர் நூலகத்துலகியோஸ்க் மாதிரி நாலு கம்ப்யூட்டர் போட்டு நான் சொன்ன கதைகளை ஏற்றினார். இதை அண்ணா நூலகத்திலும் செய்திருக்கிறார்.







**சி**றுகதை எனும்போது ஒரு கதை படிக்க குறைந்தபட்சம் 25 நிமிடம் ஆகலாம். ரொம்ப மெதுவாக வாசித்தால்கூட 50 நிமிடங்கள் தாண்டாது.

இத்துடன் நிற்காமல் அறுபது நூலகர்களைச் சேர்த்து ஒரு குரூப் தொடங்கி அவங்க அந்தந்த ஊர்கள்ல உள்ள நூலகத்திற்கு கதைகளை அனுப்பணும்னு ஒரு முன்னெடுப்பு செய்தார். என் வாட்ஸ்அப் குரூப் ஒன்று முழுவதும் நூலகர்கள்தான். அது நல்ல ரீச்சாச்சு...” என்றவரிடம் தினமும் ஒரு சிறுகதை எப்படி என்றோம்.

“தினமும் காலையில் தூங்கி எழுந்ததும் இன்னைக்கு என்ன நூல் எடுத்து படிக்கப்போறேன்னு நெட்ல தேடுவேன். என் கையில் எப்பவும் புத்தகம் இருந்திட்டே இருக்கும். எப்படி தண்ணீர் இடையில் குடிப்போமோ அது மாதிரி என் வாசிப்பு இருக்கும். சிறுகதை எனும்போது ஒரு கதை படிக்க குறைந்தபட்சம் 25 நிமிடம் ஆகலாம். ரொம்ப மெதுவாக வாசித்தால்கூட 50 நிமிடங்கள் தாண்டாது.

சில கதைகளில் வார்த்தைகள் முக்கியம்னு தோணுச்சுனா அதை குறித்து வைத்து அதை அந்த மொழியில், புத்தகத்தில் எப்படியிருக்கோ அப்படியே சொல்வேன். பெரும்பாலும் பத்து அல்லது 12 நிமிடங்களில் சொல்லிடுவேன். ஆனா சில கதைகள் இந்த அரைமணி நேரம் வரை கூட எடுக்கும். என் கதைகளை Underthetree.co.in தளத்துல போய்க் கேட்கலாம்...” என்கிறவருக்கு வீட்டில் பெரிய சப்போர்ட்.

“என் கணவர் பெயர் வாசுதேவன். அவர் சாப்ட்வேர் எஞ்சினியராக இருக்கார். பையன் விக்ராந்த் அகமதாபாத்ல படிக்கிறான். பொண்ணு விஸ்மிதா 9ம் வகுப்பு படிக்கிறாள். அவங்க எல்லோருக்கும் நான் கதை சொல்றது பிடிக்கும். எனக்கு வர்ற ஃபீட்பேக் எல்லாத்தையும் படிச்சிட்டு பாராட்டுவாங்க.

இப்ப நான், ‘அண்டர் தி ட்ரீ ஃபவுண்டேஷன்’னு ஒரு அமைப்பை ரிஜிஸ்டர் பண்ணியிருக்கேன். இதன்மூலம் சில பள்ளிகளுக்கு புத்தகங்கள் வழங்கலாம்னு நினைக்கிறேன். தவிர, பள்ளி நூலகங்களுக்கு என் கதை சொல்லல் ஆடியோக்களைக் கொடுக்கலாம்னும் இருக்கேன்...” என ஆத்மார்த்தமாகச் சொல்கிறார் ரம்யா வாசுதேவன்.